எல்லா உயிர்களும் தோன்றி மடிகின்றன என்றாலும் மனிதனுக்கு மட்டுமே சிந்தனையாற்றலும் அதனை வெளிப்படுத்தும் மொழியாற்றலும் உண்டு. உள்ளத்து உணர்வுகளை உலகுக்கு அறிவிக்க வேண்டி மனிதன் கண்டறிந்த மொழியின் வழியான அற்புத முயற்சியே இலக்கியம். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த மனிதர்களின் வாழ்வியல் நிலையை, சமூகக் கருத்தாக்கங்களை இன்று நாம் அறிவதற்குப் பெரிதும் துணைநிற்பது அவ்வக்காலகட்டத்தில் தோன்றிய படைப்புகளே!

அவ்வகையில் காலந்தோறும் தோன்றிய படைப்புகளில் அவ்வக்காலம் வெளிப்படுவது போல தற்கால இலக்கியங்களிலும், இவை வெளிப்படும் என்னும் கருதுகோளை முன்வைத்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெறுகிறது.

அச்சுத் துறையின் வளர்ச்சியும் ஊடகத் துறையின் பெருக்கமும் எல்லோரையும் எழுதத் தூண்டியிருக்கின்றது. அந்த எழுத்துகள் எல்லாம் இலக்கியங்களா என்பதை அதில் காணப் பெறும் காலப் பதிவுகளே தீர்மானிக்கும். எனவே இலக்கியம் காட்டுகிற காலத்தின் சுவடுகளைத் தேடுவது புதுமையிலும் புதுமை.


இத்தகைய புதுமையான பொருண்மையோடு அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப் பண்பாட்டு மையம், இனிய நந்தவனம் பதிப்பகம், செருமனி தமிழருவி வானொலி மற்றும் நுண்கலைக் கல்லூரி, மலேசியா செந்நூல் முத்தமிழ்ப் படிப்பகம், ஆப்பிரிக்கா தமிழ்ச் சாரல், எம்.டி.எஸ். நிகழ்வு மற்றும் மேலாண்மை ஆலோசனை நிறுவனம், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்தை நடத்தி அவ்வழியாகப் பெறப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்த ஆய்வு நூலை வெளியிடுவது மிக்க மகிழ்ச்சியை நல்குகிறது.

**நா.இராஜேந்திரன்**
துணைவேந்தர்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

ISBN : 978-81-953066-9-5

# தற்கால இலக்கியங்களில் காலத்தின் சுவடுகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம், பன்னாட்டு ஆய்வு நூல் 2020



நூல் குறிப்பு

## "தற்கால இலக்கியங்களில் காலத்தின் சுவடுகள்"


| | |
|---|---|
| பதிப்பாசிரியர்கள் | பேரா.சே. செந்தமிழ்ப்பாவை<br>நந்தவனம் சந்திரசேகரன், |
| முதல் பதிப்பு | சூலை 2021 |
| உரிமை | பதிப்பாசிரியர்களுக்கே |
| பக்கம் | 240 |
| கணினி அச்சு | கனிஷ் கிராபிக், மதுரை. |
| அட்டை வடிவமைப்பு | ஆ.சு. கண்ணன், மதுரை |
| அச்சாக்கம் | ஏ.கே. பிரிண்டர்ஸ், சென்னை. |
| வெளியீடு | இனிய நந்தவனம் பதிப்பகம்<br>எண்.17 பாய்க்காரத் தெரு,<br>உறையூர், திருச்சி - 620 003,<br>தமிழ்நாடு, இந்தியா. |
| பேச | 94432 84823 |
| மின்னஞ்சல் | nandavanam10@gmail.com |
| விலை | ரூ. 200/- |
| புத்தகக் குறியீட்டு எண் | 978-81-953066-9-5 |


## Tharkala Elakkiyangalil Kalathin Suvadugal


| | |
|---|---|
| First Edition | July 2021 |
| Editors | Prof. S. Senthamizh Pavai,<br>Nandavanam Chandra Sekaran, |
| Number of Pages | 240 |
| Designed by | Kanish Graphic, Madurai |
| Printed by | A.K. Printers, Chennai. |
| Published by | Iniya Nandavanam Pathippagam<br>#17, Paikkara Street,<br>Woraiyur, Trichy - 620 003.<br>Tamilnadu, India. Mob : 94432 84823<br>email : nandavanam10@gmail.com |
| Price | Rs.200/- |
| ISBN No | 978-81-953066-9-5 |

14. பிரயாகை புதினத்தில் காணலாகும் உத்திக்கூறுகள் 90
ப.வளர்மதி

15. பாரதியார் பாடல்களில் காலப்பதிவுகள் 97
முனைவர் கா.கணநாதன்

16. கவிதை இலக்கியத்தில் குழந்தைகள் 103
முனைவர் யா.சாம்ராஜ்

17. மீராவின் வாழ்வும் பணியும் 108
ஆ. சுதாகர்

18. புதுக்கவிதையில் சுனாமியின் சுவடுகள் 113
செ. ராஜசேகரன்

19. நீவாநதி நாவலில் நீர்மேலாண்மை 118
ம. ரஞ்சிதா

20. நீவாநதி நாவலில் விவசாயமும் விவசாயச் சிதைவும் 125
முனைவர் யாழ். சு.சந்திரா

21. மு.மேத்தாவின் கவிதையில் காலச்சுவடுகள் 131
இரா.லோகநாதன்

22. மருதகாசியின் திரையிசைப் பாடல்களில் சமூக அவலங்கள் 135
க.கவிதா

23. பெருமாள் முருகன் சிறுகதைகளில் வறுமை 142
போ.பிரபா

24. ராணிமுத்து ஆசிரியர் அ.மா.சாமியின் சமூகப் பயணம் 148
ஆ ஏழுமலை

25. காலத்தின் சுவடுகளில் கீழ்வெண்மணி 153
முனைவர் ம.தமிழரசன்

26. தற்காலக் கவிஞர்கள் படைப்புகளில் காலத்தின் சுவடுகள் 160
முனைவர்.சி.அருள் செல்வம்

27. பாரதியின் படைப்புகளில் காலத்திற்கேற்ற புதுமை 164
வெ.சிவசங்கரி





28. திருமூலர் கூறும் முத்தி நிலையடைய நான்கு நெறிகள் 169
ம. தங்கராஜ்

29. கவிஞர் கொளஞ்சியின் கவிதைகளில் காலப்பதிவுகள் 175
அ.ரா.பானுப்பிரியா

30. ஏதிலிகள் 180
ஜ.ரெஜினாபேகம்

31. "மு.சுயம்புலிங்கத்தின் நிறம் அழிந்த வண்ணத்துப் பூச்சிகள்" 184
கு.கங்காதேவி

32. தலைப்புச் செய்தி - கவிதையில் காலப்பதிவுகள் 189
மு. சிவசுப்பிரமணியன்

33. துரை. இரவிக்குமார் கவிதைகளில் காலப்பதிவுகள் 193
வ.மீனாட்சி

34. ஜெயகாந்தன் சிறுகதைகளில் காலம் 198
முனைவர் கு.ரா.பத்மினி தேவி

35. மீராவின் கவிதைகளில் காலம் 202
ஆ.சகுந்தலா

36. கடவுளின் காலம் 209
முனைவர் பெ.குபேந்திரன்,

37. மீராவின் கவிதைகளில் காலத்தின் சுவடுகள் 216
முனைவர் பா.ஸ்ரீவித்யாபாரதி

38. தற்கால இலக்கியங்களில் காலத்தின் சுவடுகள் (பயணக் கட்டுரை) 220
ஆர்.ராஜேஸ்வரி ஸ்ரீதர்

39. சுதேசிக்கதை மரபில் கல்கி 224
வே.ஜெயமாலா

40. பாரதியின் காலம் 228
எஸ். புளோரல் ஜெயா

41. கவிஞர் மீராவின் ஊசிகளில் காலம் 235
சா.தே. ஸ்டெல்லா ராணி

# கவிதை இலக்கியத்தில் குழந்தைகள்

**முனைவர் யா.சாம்ராஜ்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஆறுமுகம்பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி,
திருப்புத்தூர் - சிவகங்கை மாவட்டம்.

கவிதை ஒரு விந்தை. இது பல்வேறு முகங்களைத் தன்னகத்தே கொண்டது. கவிதை, அழவைக்கும், ஆனந்தப்படுத்தும், சிந்திக்க வைக்கும். சிறைப்படுத்திவிடும், பைத்தியமாக்கும். பாவங்கள் போக்கிவிடும். இப்படிப் பல பரிமாணங்களை உள்ளடக்கும் நிலையில்,

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது..."

என்று பாரதியார் கவிதைக்கெனப் புதுமையினை உட்புகுத்தி எண்ணிலடங்காக் கவிஞர்களுக்கு அன்புக்கட்டளை அருள்கிறார். இதன்போக்கில் குழந்தைகளின் உலகம் தனித்துவமிக்கது. கடவுளை நேரில் காணத் துணைபுரிவது. கடவுள் நம்மோடு குடியிருக்கிறார் என்று அழகாய் உணர்த்துவது. இவ்வாறு குழந்தை இலக்கியத்தில் கவிஞர் பெருமக்களின் ஆளுமை குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**புதுக்கவிதையும் காலப்பிரிவுகளும்**

புதுக்கவிதையின் வளர்ச்சியினை நான்காகப் பிரிக்கலாம். 1.மணிக்கொடிக் காலம் (கி.பி.1930 முதல் 40 வரை), 2.எழுத்து பத்திரிகைக் காலம் (கி.பி.1950களில்), 3.கசடதபற காலம் (கி.பி.1970 முதல் 73 வரை), 4.வானம் பாடிகள் காலம் (கி.பி.1970க்குப் பிறகு) என வரையறை செய்துள்ள நிலையில், புற்றீசலாய்க் கவிஞர்களின் வரவும், சிந்தனையும் நேற்றைவிட இன்று சிறப்பாய், இன்றை விட நாளை மிகச் சிறப்பாய்

வளர்வதைக் கண்ணுறக் காணமுடிகிறது. மொத்தத்தில் படைப்பாளர்களில் படைப்புகள் ஒவ்வொன்றும் காலங்காலத்திற்கும் பேசப்படும் வரலாறாகிறன என்பதே உண்மை. இதனைக் கவிப்பேரரசு வைரமுத்து,

"மனிதன் தன்னைப் பதிவு செய்து கொள்வதற்கு, எல்லாக் கலைகளையும் விடக் கவிதைதான் கச்சிதமானது. ஒரு நிஜமான கவிதை காலம் காலமாகிவிட்டாலும், கால காலங்களுக்கும் வாழ்கிறது" (கல்வெட்டுக்கள் பக்: 28, 29) என்கிறார்.

**குழந்தை கவிதைகளில் அழகியல்**

குழந்தைகள் உலகம் வியப்பானது. விசித்திரமானது. கவிஞர்கள் கைகளில் பேனாக்களின் பிரபஞ்சம் குழந்தைகள் குறித்து எழுதத் தொடங்குகின்றபோது, மயிலிறகாய், பேரானந்தம் கொள்கிறது. குழந்தைகள் யாவரும் கவிதைகளாகிப் போகிறார்கள். குழந்தைகளே கவிதைகள். அவர்களுக்கென்ன கவிதைகள் என்று தோன்றுமளவிற்கு மகத்துவம் நிறைந்தவர்களாய்க் காட்சிப்படுத்தப்படுகிறார்கள். குழந்தைகளைப் பிடிக்காதவர்கள் யார்தான் இருக்க முடியும். இதனைக் கவிஞர் துஷ்யந்த் சரவணராஜ்,

"அழகானபார்வை
அழகானசிரிப்பு
அழகானபேச்சு
இருந்தால் போதும்
பிள்ளைபிடிப்பவனுக்கும்
பிள்ளைபிடிக்கும்!" (ஒரு துளிப் புன்னகை ப : 30)

என்கிறார். குழந்தைகளுக்கு மழை பிடிக்கும் என்பதைவிட, மழைக்குக் குழந்தைகளைக் கூடுதலாய்ப் பிடிக்கும் என்பதே முற்றிலும் உண்மை, சான்றாக,

"மழையில்
குடைப் பிடித்து
நின்ற குழந்தையை
அம்மா அழைக்க
குழந்தை
குடையைக்
குளிக்க வைக்கிறேன் என்றது"



என்று கவிஞர் வஸந்த் பூபதியின் கவிதை, அழகியலை அள்ளித் தெளிக்கிறது. பிள்ளைத் தமிழின் முன்னோடி பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக்கிப் பாடினார். குலசேகர ஆழ்வார் இராமனைக் குழந்தையாக்கிப் பாடினார். இப்படி நிறையப் பேர் இருந்தும், கடவுளே குழந்தைகளைக் கொண்டாட வருகின்ற போதுதான் பிள்ளைத் தமிழ் இன்னும் பேருவகை கொள்கிறது. சான்றாக, கவிஞர் பி.மோகன்குமார்,

"பிஞ்சு விரல்களால்
குழந்தை தன்னை
வணங்கும்போதெல்லாம்
நண்பேன்டா என
அணைத்துக் கொள்கிறார்
கடவுள்"

என்று கடவுளே குழந்தைகள் மீது நட்புக்கொள்ள விழைவது குழந்தைத்தனத்தின் பேராற்றலை விளக்குகின்றது.

**குழந்தைகள் படும் அவஸ்தைகள்**

ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர்வினை உண்டு என்பது குழந்தைகள் உலகத்தில் மிகப்பெரிய பாதிப்புகளையும், பரிதாபங்களையும் ஏற்படுத்துகின்றது. பிள்ளைத் தமிழில் ஆணுக்குப் பதினாறு வயது வரையும், பெண்ணுக்குப் பூப்புத் தொடங்கும் வரையும் செல்லங்கொடுத்துப் பாடப்படும் இவ்விலக்கியம், படித்துத் தெரிந்து கொள்வதற்கும், மதிப்பெண் பெறுவதற்கும் மட்டுமே கருவியாகி இருக்கிறதே தவிர, நிஜ வாழ்க்கைச் சூழலில் கல்வி என்னும் ராட்சசன் இவர்களை வதை செய்வதைத்தான் சகித்துக்கொள்ள முடியவில்லை.

அதிகாலை ஏழு மணிக்கே வீட்டுவாசலில் பள்ளி வாகனச் சத்தம், பதட்டம் நிறைந்த குழந்தைகளின் மனநிலை வயதுக்கு மீறிய புத்தகச் சுமை. அதிக வீட்டுப்பாடம், உடல் சோர்வு, மனநிலை பாதிப்பு, பயம் எனப் பல்வேறு உபாதைகள் குழந்தைகளை நசுக்கிவிடுகின்றன. இதுகுறித்துக் கவிஞர் மு.மேத்தா,

"புத்தகங்களே
சமத்தாய் இருங்கள்
குழந்தைகளைக்
கிழித்து விடாதீர்கள்"

எனக் கவிதைச் சாட்டையைச் சுழற்றுகின்றார். மேலும் கவிஞர் பழ.புகழேந்தி தனது கவிதையில்,

"வீட்ல எப்பப் பாத்தாலும்
டிவி பாத்துட்டே இருக்கான்
-ஆசிரியரிடம் பெற்றோர்.
எழுதிப் போடறத எதுவும்
உங்க புள்ள எழுதறதே இல்ல
-பெற்றோரிடம் ஆசிரியர்
இயலாமையைப்
பகிர்ந்து கொள்ளும்
இடமாகவே இருக்கிறது
ஒவ்வொரு
பெற்றோர் ஆசிரியர்
சந்திப்பும்" (கரும்பலகையில் எழுதாதவை : ப.19)

இந்தக் கவிதை மிகுந்த வலிதரக் கூடியதாக அமைகின்றது. இதை மெய்ப்பிக்கும் வகையில், "கவிதை என்பவன் ஓர் உண்மையான மனிதன். மற்ற மனிதர்களால் நேசிப்பவன். அன்பு காட்டித் தழுவிக் கொள்பவன். அவனுடைய வார்த்தையில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் பொய் வந்து புகாது" என்கிறார். இது முற்றிலும் உண்மையை உரக்கச் சொல்கிறது.

குழந்தைகள் சில கட்டங்களைக் கடந்த பிறகு பள்ளியில் நடத்தப் பெறும் பாடங்களையும், அவற்றை நெறிப்படுத்தும் ஆசிரியர்களையும் பிடிக்காமல் போய்விடுகின்றது. ஆசிரியர்களை வெறுக்கத் தொடங்கி விடுகின்றார்கள். தங்களுக்குப் பிடிக்காத ஆசிரியர் விடுமுறை என்றால் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது, இதனைக் கவிஞர் மீரா,

"வாத்தியார் மனைவி
செத்ததற்காக
விடுமுறை
மகிழ்ச்சியில் குதித்த
மணிப்பயல் கேட்டான்
வருத்தமாயிருக்கு
ஒரே ஒரு மனைவிதானா
அவருக்கு" (குக்கூ : ப. 43)



எனக் கவிதை புனைந்துள்ளார். பொதுவாகக் குழந்தைகள் ஆசிரியரை விரும்பத் தொடங்குகின்ற போது, அவர் நடத்தும் பாடமும் அவர்களுக்குக் கற்கண்டாகவே தித்திக்கும்; என்பது திண்ணம்.

குழந்தை இலக்கியம் படைப்போரின் எண்ணிக்கை சற்றே குறைவுதான் எனில், குழந்தைகள் குறித்த பதிவுகள் எண்ணிலடங்காதவை. அழகியலாக, அவலம் நிறைந்ததாகவே மிகச் சரியான கோணத்தில் பதிவு செய்யத் தவறுவதில்லை. குழந்தைகளை மழலைப் பருவம்வரை ரசிக்கும் நாம், பள்ளிப்படிப்பு என்கின்ற நிலை வரும்போது, அவர்கள் மீது வெறுப்பை உமிழுகிறோம்.

குழந்தைகள் உலகம் மிகச் சிறப்புற அமைய வேண்டுமெனில், கல்வியானது கசப்பில்லாமல் கரும்பாய் மாற வேண்டும். இதன் வழியே குழந்தைகளைக் குழந்தைகளாகவே கொண்டாட முடியும்.